[22nd February 1969

(b) whether the U. N. has offered to give 6.5 lakhs Dollars for the implementation of the scheme to cultivate lands with sub-soil water?

தீவிர விவசாய ஆராய்ச்சி, நில நீர் ஆராய்ச்சி திட்டங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) காவேரி கழிமுகப் பகுதியில் (Delta area) ஐ.நா. நிபுணர்கள் சமீபத்தில் தீவிர விவசாய ஆராய்ச்சி நடத்தினரா?

(இ) பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு வேளாண்மை மேற்கொள்ளும் திட்டத்திற்கு ஐ.நா. சபை 6½ லட்சம் டாலர் நிதி உதவி கொடுப்பதாகக் கூறியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தீவிர விவசாய ஆராய்ச்சி சம்பந்தமாக ஐ.நா. நிபுணர்கள் இதுவரை பங்கெடுக்கவில்லை. I.A.D.P நிபுணர்கள் பங்கெடுத்துள்ளனர். கீழ் ((Food Foundation) என்ற தீவிர சாகுபடி திட்டத்தின் ஐ.நா. வளர்ச்சித திட்டத்தின் கீழ் வந்துள்ள நிபுணர்கள் நில நீர் ஆராய்ச்சி தான் நடத்தியுள்ளனர்.

(இ) ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் நில நீர் ஆராய்ச்சி திட்டத்தை விரிவு படுத்தி காவேரி டெல்டா பகுதியில் பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீரின் அளவை ஆராய்ச்சி செய்து காணவும், அதனைக் கொண்டு வேளாண்மை விரிவுப்படுத்தவும் ஐ. நா. 7.079 லட்சம் டாலர் கொடுக்க உறுதியளித்துள்ளது.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : May I know when this investigation is likely to be over?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The investigation will take some more time.

Ad hoc body constituted for the transfer of the Panchayat Union Elementary School Teachers.

* 26 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) the names of the M.L.As who have been appointed to the sub-committee for the transfer of the teachers of Panchayat Unions in this State :

(b) whether any of the M.L.Cs. are members of this Sub-Committee; and

(c) if not, the reasons therefor?

22nd February 1969]

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை
மாற்றல் குறித்த ஆலோசனைக் குழு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மாற்றுதல் பற்றிய உதவிக் குழுவில், சட்டப் பேரவை உறுப்பினர்கள் யார் யார் இடம் பெற்றுள்ளனர் ?

(இ) சட்ட மன்ற உறுப்பினர்கள் யாராவது இக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனரா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் மாறுதல் குறித்து ஆலோசிப்பதற்காக அமைக்கப்பட்ட தனிக்குழுவில் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதில்லை.

(இ) சட்டமன்றப் பேரவையைச் சேர்ந்த தொகுதி உறுப்பினர் அக்குழுவில் சேர்க்கப்படுகிறார்.

(உ) சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அலுவல் வட்டார அடிப்படையில் (Functional Territorial basis) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வட்டாரங்கள் பெரியவை என்பதுடன், அவற்றின் அதிகார வரம்பில் பல ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அடங்குகின்றன. எனவே, இந்தத் தனிக்குழுவில் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது நடைமுறையில் இயலாது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய தொகுதி முழுவதும் இல்லாவிட்டாலும், எங்கே அவர்கள் குடியிருக்கிறார்களோ அந்த பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட இடங்களிலாவது சேர்ப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :அங்கத்தினர் குடியிருக்கும் இடத்தில் பிரதிநிதித்துவம் கொடுப்பது நடைமுறைக்கு ஒத்து வராது.

THIRU A. R. DAMODARAN : Sir, the same situation arises in the case of the District Development Councils. The M.L.Cs. have been asked by the Collectors of the districts to choose the district in which they would like to serve. May I suggest to the Hon. Minister that the same procedure may be adopted in the formation of the committee so that the Members of this House would have the opportunity of serving on such Committees?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மாவட்ட வளர்ச்சிக் குழு என்பது ஒரு மாவட்டத்திற்கு ஒன்றாக இருப்பது. அது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறது. அதன் உறுப்பினர்கள் செல்

[22nd February 1969

வதற்கும் கருத்துக்களை சொல்வதற்கும் வாய்ப்பாக இருப்பதற்காக இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மாவட்டங்களில் சேர்ந்து ஒருவர் இருந்து மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் 50, 60 ஊராட்சிக் குழுக்களில் இடம்பெற வேண்டியிருக்கும். அப்படியானுல் ஆண்டு முழுவதும் அந்தக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும் இருக்கும். அதில் கலந்துகொள்வது நடைமுறைக்கு ஒத்துவராது என்பதால் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜி. பராங்குசம் : தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சி குழுக்களில் மேலவை உறுப்பினர்களுக்கு எந்த குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியனில் அவர்கள் சொந்த ஊர் இருக்கிறதோ அவற்றில் இடம் கொடுப்பதால் அதிகமாக எண்ணிக்கை வந்துவிடாது. ஆகையால் அவர்களுக்கு இடம் தருவதைப் பற்றிப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைவிட பரந்த பகுதிக்கு அதிகாரம் செலுத்துபவர்களாக இருப்பதால் அவர்களை குறுகிய எல்லைக் கோட்டில் அடைக்கக் கூடாது என்று விட்டுவிட்டோம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : பரந்த பகுதியில் வேண்டவே வேண்டாம். ஒரே இடத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அத்தகைய எண்ணம் அரசாங்கத்திற்கில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாவட்ட வளர்ச்சிக் குழுவில் மேலவை உறுப்பினர்கள் ஒரு மாவட்டத்திற்குத்தான் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று கூறினர்கள். தஞ்சையைப் பொறுத்தவரையில், கீழ்த்தஞ்சை, மேல்தஞ்சை என்று இரண்டு மாவட்டங்களுக்கும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற போதிலும் அவர்களைப் பொறுத்து இரண்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் அளிக்காமல் ஒரு மாவட்ட வளர்ச்சிக் குழுவில்தான் அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று கூறுகிறூர்கள். ஒருவர் ஒரு மாவட்டத்திலுள்ள இரு வளர்ச்சிக்குழுக்களிலும் பிரதிநிதித்துவம் பெற அரசாங்கம் வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : ஏற்கனவே அப்படிப்பட்ட உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாக கருதுகிறேன். இல்லாவிட்டால் அதைப் பரிசீலித்து ஆவன செய்யத் தயாராக இருக்கிறேம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்ததாக சொல்கிறுர்கள். எனக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த பகுதியில் அதிகமாக வாக்குகள் கிடைத்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேனே அந்த மாவட்டத்தின்

22nd February 1969]

டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு போகமுடியாத நிலையில் மேற்கு ராமநாதபுரம் தான் நான் போகவேண்டுமென்று கலெக்டர் தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். 33 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் போவது கஷ்டமாக இருக்கும் ஆனால் மேற்கு கிழக்கு இரண்டு மாவட்டங்களில் இருப்பது கஷ்டமில்லை. ஆனால் அடுத்தடுத்து இரண்டு நாட்களில் கூட்டம் போடுகிறார்கள். சேர்ந்து போடுவதில் சிரமம் இல்லை. அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அதைப்பற்றி விரைவில் கவனிக்கலாம்.

திரு. கே. கே. கோதண்டராமன் : சட்டமன்ற உறுப்பினர்கள் 3 பஞ்சாயத்து யூனியன்களின் ஆசிரியர் மாற்றும் குழுக்களில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் தொகுதி மூன்று யூனியன்கள் சேர்ந்த தொகுதியாக இருக்கிறது. ஆகையால் அவர்கள் மூன்று இடங்களுக்கு போகும்போது மேலவை உறுப்பினர்கள் ஒரு இடத்திற்காவது போவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மூன்றுக்கும் முப்பதுக்கும் இடையில் வித்தியாசம் நிறைய இருக்கிறதல்லவா?

திரு. என். ஆர். தியாகராஜன் : என் ஜில்லாவில் இரண்டு டெவலப்மென்ட் கவுன்சில் இருந்தது. புதிதாக வந்த கலெக்டர் பெல்லியப்பா அவர்கள் அவற்றை ஒன்றாக வைத்து இரண்டு ஜில்லாக்களிலும் சேர்ந்து பிரதிநிதித்துவம் அளிக்கும் நிலையில் வைத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மூலக் கேள்வி, மேலவை உறுப்பினர்கள் இடம் பெறுவது பற்றியாகும். இப்போது சொல்லப்படுவது மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டையும் ஒன்றாக ஆக்கியது பற்றி. அது நடைமுறைக்கு ஒவ்வாதது. அதைப் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I do not know whether the Hon. Minister knows this. There are two district development councils in my district and I attend both the council meetings. The Collector is sending invitations to me to attend the meetings of both the district development councils. There is no harm in allowing them to attend the meetings of both the councils so that they might be of some use.

THE HON. THIRU M. MUTHUSWAMY : There is no difficulty; we will examine.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இப்போதுள்ள விதிகளின்படி மேலவை அங்கத்தினர்கள் எங்கு வாசம் செய்கிறார்களோ அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திற்குச் செல்கிறார்கள். அவ்வாறு இருக்க இந்த இடத்தில் மட்டும் என் விதிவிலக்கு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[22nd February 1969

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: பஞ்சாயத்து யூனியன் நடவடிக்கைகளில் கலந்து கொள்வது என்பதும் ஆசிரியர் மாறுதல் குழுவில் கலந்துகொள்வதும் தனித் தனியான நிலைகள். உறுப்பினர்கள் அந்தக் குழுவிலும் இடம் தேவையில்லை என்றால் அதை எடுத்துவிட ஆலோசிப்போம்.

திரு. எம். எத்திராஜுலு: இதுபற்றி பல கேள்விகள் கேட்டு பல பதில்கள் சொல்லப்பட்டன. இங்கு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இனிமேலாவது மேலவை உறுப்பினர்கள் அந்தந்த மாவட்ட தலைநகரில் இருக்கிற இடங்களில்—அங்கேதான் இந்தக் குழு கூடி ஆசிரியர்கள் மாற்றங்கள் குறித்து தீர்மானிப்பதால்—அங்குள்ள அங்கத்தினர்களையாவது அக்குழுவில் சேர்க்க அரசாங்கம் முன்வருமா? அந்த விஷயம் பரிசீலிக்கப்படும் என்றாவது முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மேலவை உறுப்பினர்களுடைய இந்த உரிமைப் போராட்டத்தை நாங்கள் மிகுந்த அனுதாபத்தோடு கவனித்து அதைப் பற்றி பரிசீலிக்க முயற்சிப்போம்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் நடைபெறும் இந்த நியமன மாறுதல்கள் மாவட்ட அளவில் செய்யப்படுவதில்லை. அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அளவில்தான் செய்யப்படுகிறது.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

III. ANNOUNCEMENT REDECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. today, the following programme of business has been decided:

February 24th—Presentation of the Second Supplementary Statement of Expenditure for 1968—69 and Demands for Grants for Excess Expenditure in the year 1964-65.

Discussion on the Governor's Address (continued).

February 25th—Discussion on the Second Supplementary Statement of Expenditure for 1968—69 and Demands for Grants for Excess Expenditure in the year 1964—65.

Discussion on the Governor's Address (continued).

February 26th—Discussion on the Governor's Address (continued).